Regd M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

| மலர் 27 | ஜய கார்த்திகை 1954 நவம்பர் | இதழ் 11 |
|---|---|---|

## அருள் மரபு வாழி!

டாக்டர் - வ. ஆ. தேவசேநாபதி, M. A., Ph. D.
தத்துவப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

இறைவனை யடைந்த மெய்யன்பர்களின் வாழ்க்கையைக் கருத்தூன்றிப் பார்க்கும்போது, சில ஒப்புமைகள் புலப்படுகின்றன. "வேறுபடும் சமயம் எல்லாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடுங்கருத்தில்லை" என்பது உண்மையெனத்தெரிகிறது. எச்சமயத்தவராயினும் இறைவனை யடைந்தவர்களெல்லாம் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள், அவர்கள் எல்லாம் 'திருவடிப் பேரினத்தர்.' மற்றையோரெல்லாம் 'சிற்றினத்தர்.' இதனால் தான் போலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "பத்தராய்ப்பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்; பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்;......அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என்கிறார். அப்பாலும் என்ற சொல்லில், காலம், இடம், சமயம் இவை போன்றவற்றிற்கெல்லாம் அப்பாலும் என்ற பொருள் உய்த்துணரக் கிடக்கிறதல்லவா? ("மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக்கப்பால், முதல்வனார் அடிச்சார்ந்த முறைமையோரும் நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும் நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்" என்றும் பெரியபுராணத்துள் வருவதைக் காண்க.)

அப்பர் வாழ்க்கையிலும் பிரகலாதன் வாழ்க்கையிலும் இவ்வாறு நாம் காணக்கூடிய ஒப்புமைகள் சில உண்டு. வேற்றுமையில் நாட்டமுள்ளோர், "இதென்ன புதுமை! அப்பர் முதியவர்; பிரகலாதன் சிறுவன்; அப்பர் சைவர்; பிரகலாதன் வைணவன்; இவர் தம்முள் காணக்கூடிய ஒற்றுமை என்ன?" என்று கேட்கலாம். ஆனால் கூர்ந்து பார்க்கத் தொடங்கும்போதே ஒப்புமைகள் புலனாகின்றன. இவர்களைக் கொல்ல கையாளப்பெற்ற முறைகள் பெரிதும் ஒத்திருக்கின்றன. அவை, நஞ்சு ஊட்டல், கொல்களிற்றின் எதிர் விடுவது, கல்லோடு கட்டிக் கடலில் வீழ்த்துவது போன்றவையாம். இவற்றுள். கல்லில்கட்டிக் கடலில் வீழ்த்திய நிகழ்ச்சியைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

கல்லோடு கட்டிக் கடலில் வீழ்த்தப்பெற்ற மெய்த் தொண்டராம் அப்பர், 'எப்பரிசாயினும் ஆக, ஏத்துவன் எந்தையை என்று செப்பிய வண்தமிழ் தன்னால் சிவன் அஞ்செழுத்தும் துதித்தார்' என்கிறார் சேக்கிழார். என்ன நடந்தது? "பெருகிய அன்பினர் பிடித்த பெற்றியால் கரு நெடுங்கடலினுள் கல்மிதந்ததே!" பெருங்கல் எவ்வாறு தெப்பமாய் மிதக்கக்கூடும் என்ற ஐயமும் வியப்பும் எழக் கூடும். இறைவன் திருப்பெயருக்கு உள்ள பேராற்றலை விளக்குகிறார் சேக்கிழார்:

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ்மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?

பிறவிப் பெருங்கடலையே நீந்துவதற்குத் துணை செய்யும் இறைவன் திருப்பெயர்!

இவ்வாறே, பிரகலாதன் வரலாறும் அமைகிறது. "தரைகாணு வெள்ளத்து உய்த்துவிடீர்" என்று இரணியன் ஏவுகிறான் ஏவலாளர்களை. 'கால் விசையிற்போய் இட்டிட்டார் கடலின் நடுவேதான்.' பிரகலாதனும் அப்பரைப் போலவே நிலைகலங்காது இறைவன் நாமத்தை விடாமல் ஓதிக்கொண்டிருக்கிறான்.

நடுக்கும் தனி நாயகன் நாமம்
விடுகிற் கின்றில னாதலின் வேலை



மடுத்து அங்கதில் வங்கமும் அன்றாய்க்
குடுவைத் தன்மையதாயது குன்றம்

என்கிறார் கம்பர்.

இடுக்கண் உற்ற பொழுதும் இறைவனை மறவாதிருப்போர் நிலை இறைவன் நிலையை ஒத்ததாகிறது. 'எப்பரிசாயினும் ஆக' என்று இறைவனை ஏத்துபவர்கள் இறைவனும் அப்பரிசு பெற்றுவிடுகிறார்கள்! "பாலிடை நஞ்சங் கண்டு பதைப்பின்றித் தாமுண்டு ஓர்பால் நூலிடையவரே யென்ன"ப் பொலிந்தார் அப்பர். "பொடியார்க்குந் திருமேனிப் புனிதர்க்கு முன்னைவிடம் அமுதானால் அவர் அடியார்க்கு நஞ்சமுதம் ஆவது அற்புதமா" என்கிறார் சேக்கிழார். இதைப்போலவே நலந்தரும் சொல்லாகிய நாராயணா என்னும் நாமத்தை ஓதிய பிரகலாதனும் திருமாலைப் போலவே காட்சி அளிக்கிறான்.

தலையிற் கொண்ட தடக்கையி னான்தான்
நிலையின் தீர்வில் மனத்தில் நினைந்தான்
சிலையில் திண்புன வில்லினை ஆலின்
இலையிற் பிள்ளை எனப்பொலி கின்றான்.

அப்பர் சிவபெருமானைப் போல காட்சி அளிக்கிறார்; பிரகலாதன் ஆலிலைமேல் கண்வளர்ந்த பாலகனும் திருமாலைப்போல காட்சி அளிக்கிறான். இவர்களை அல்லல் என் செய்யும்? அருவினை என் செய்யும்? அருள் மரபு வாழி!

---

# ஒரு பேச்சு வார்த்தை

திரு. பு. ர. சுவாமிநாதன், M.A.

கடவுளைக் காணமுடியுமா? அவருடன் பேச முடியுமா? இத்தகைய கேள்விகளைச் சில தற்கால இளைஞர்கள் கேட்கிறார்கள். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதே கேள்வியைத்தான் இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் சுவாமி விவேகானந்தர் கேட்டதாக அவரது வரலாற்றில் வாசிக்கின்றோம். பரமஹம்சர் தம் சீடரது தலையில் தம் கையை வைத்ததாகவும் உடனே விவேகானந்தர் ஏதோ அதிர்ச்சி

யுற்றது போலானதாகவும் பிறகு நல்லுணர்ச்சி பெற்று உயர்ந்த வாழ்க்கையி லீடுபட்டதாகவும் அறிகின்றோம்.

விவேகானந்தருக்குப் பலநூற்றாண்டுகள் முன் வாழ்ந்த மற்றொரு பெரியார் தாம் கடவுளைக் கண்டு அவருடன் பேசிய சில வார்த்தைகளை அவரது மொழியிலேயே பார்ப்போம்.

"ஆண்டவனே! இப்பெரிய பிறப்பை விட்டு என்னை நீக்கி உன்னிடம் அன்புகொள்ளுமாறு எனக்கு உதவவேண்டும். தானாக அத்தகைய அன்பு எனக்கு ஏற்படாது போலத் தோன்றுவதால் அதிற் சிறந்த உனது அடியவர்கள் கூட்டத்தில் என்னைச் சேர்ப்பித்துவிடு. ஒரு சமயம் என்னிடம் தாங்கள்வந்து "இனி உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்" என்றெல்லாம் கூறித் தங்கள் திருவடி தரிசனமும் செய்வித்து அருளினீர்களே, அந்த வார்த்தைகள் பொய்ப்பித்துவிட்டனவே. இம்மாதிரி தாங்கள் கூடவா பொய்யாக நடப்பது? இல்லை. என் பொல்லாத காலந்தான் இவ்வாறு என்னை நினைக்கச் செய்கிறது. தங்களைக் காணாதது என்னால் தாங்கவே இயலவில்லை. மிகவும் இன்னலுறுகின்றேன். ஆதலால் சற்றும் தாமதியாது தயவுசெய்து தங்கள் அருள் வடிவான திருவடிகளைக் காட்டுங்கள்.

"நான் மிகவும் தாழ்ந்தவனே. பத்தியும் இல்லை. பணிவும் கிடையாது. தங்களைக் காணப் பித்தும் ஏற்படவில்லை. பிதற்றுதலுமில்லை. இருப்பினும் தங்கள் திருவடிகளைக் கண்டாலன்றி எனக்கு ஆறுதலேற்படாதாகையால் என் பிறப்பை யறுத்துத் தங்களோடு ஒன்றியிருக்கச் செய்ய வேண்டுகிறேன்.

"இத்தகைய தாழ்ந்த மனோநிலை எனக்கு ஏன் ஏற்பட்டுள்ளது என யோசித்துப் பார்த்தேன். என் தீவினையே இதற்குக் காரணம் எனப் புலப்படுகிறது. தாங்கள் இரக்கங்கொண்டு என்னை அணுகினால்கூட தங்களை வெட்கத்தால் பார்க்காவண்ணம் அது தடுத்துவிடுமோ எனவும் ஐயுறுகின்றேன்.

"இவ்வாறு பலப்பல தங்களைப்பற்றி எண்ணி எண்ணி எனக்குள்ளாகவே ஒருவகையான ஆறுதல் ஏற்பட்டுள்ளது. தங்களைக்கண்டு என் உள்ளத் துயரை மாற்றிக் கொள்ளலாமெனவும் துணிவு உண்டாகிவிட்டது. ஆகை



யால் எம்பெருமானே இனியேனும் வந்து என்னை ஆற்றுவாயாக!"

இவ்வார்த்தைகளைப் படிக்கும்போது நேராக ஒருவர்க்கொருவர் பேசுவதுபோலவே தோன்றவில்லையா? இவைகளைப் பேசிய பெரியார் சகஜமாகப் பழகும் ஒருவரிடம் உரிமையாகக் கேட்கின்றது போலல்லவா தமது குறைகளையுங் கூறி அதற்குப் பரிகாரமுங் கேட்கின்றார். இப்பேச்சு வார்த்தை யார் யாருக்குள் நடந்ததென்பதை அறிந்து கொள்ளவேண்டுமல்லவா? மந்திரியாக வாழ்ந்த சைவ சமய ஆசாரிய புருஷராக விளங்கிய சன்மார்க்கத் தலைவரான மணிவாசகப் பெருந்தகை அருளிய எண்ணப் பதிகம் என்பதில் இவ்வாறு இறைவனுடன் அவர் நெருங்கி உரிமையுடன் பேசிய பேச்சுவார்த்தைகளைக் காண்கின்றோம்.

உயர்ந்த ஆத்ம அனுபவமுள்ள இத்தகைய பெரியோர்களே

பத்திலனேனும் பணிந்திலனேனும்உன்
உயர்ந்த பைங்கழல் காணப்
பித்திலனேனும் பிதற்றிலனேனும்
பிறப்பறுப்பாய் எம்பெருமானே
முத்தனையானே மணியனையானே
முதல்வனே முறையோ என்று
எத்தனை யானும் யான்தொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே

எனக் கதறுவார்களேயானால் மிகத் தாழ்ந்த, அனுபவமேயில்லாத நாம் எங்ஙனமெல்லாம் நம்மை ஒழுங்குபடுத்திக் கொண்டால் அப்பொன்னார் திருவடிகளைக் கண்டு நற்பயனடையலாம் என்பதை நன்கு சிந்தித்து அதற்கானவை செய்வதே நம் கடமையாகும்.

---

# கூத்தப்பிரான் திருஉருவ அமைப்பு*

திரு. ம. சி. நித்தியானந்தம்

சிவாலயத்தில் சிவலிங்கத்திற் கடுத்த பெருமை கூத்தப்பிரானுக்கே. இறைவனின் உருவத் திருமேனிகளில்

*திருவாலங்காட்டில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

சிறந்தமைந்தது கூத்தப்பிரானின் திருஉருவமேயாம். கூத்தப்பிரானை வணங்கி எழுந்த சேக்கிழார் அப்பிரானது உருவ அமைப்பை அழகொழுக எடுத்து எழுதிக் காண்பிக்கிறார். அஃது, கூத்தப்பிரானானவன் 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன், நிலவுலாவிய நீர்மலி வேணியன், அலகில் சோதியன் அம்பலத்தாடுவான், மலர் சிலம்படி' மாணப் பெற்றவன் என்பதாம்.

இதனுள் 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்பது கூத்தப்பிரானின் உயரிய ஒப்பற்ற பண்பை விளக்கிக் காட்டுகிறது. 'நிலவுலாவிய நீர் மலி வேணியன்' என்பது கூத்தப் பிரானானவன் தான் கொண்ட அழியாத் தூய்மையின் அறிகுறியாக அழகுமதிக் கொழுந்தினையும், தான் கொண்ட குன்றாத் திருவருளின் குறியாக மிக்குப் பெருகிவரும் கங்கையையும், தன் முடியின்கண் வைத்துள்ளான் என்று எடுத்துக் காட்டுகிறது. 'அலகில் சோதியன்' என்பது, கூத்தப்பிரானின் திருஉருவமே "ஆதி மாலயன் அறியொணா அக்கினிப் பிழம்பாய பேரொளி, கற்பனை கடந்த சோதி" என எடுத்தியம்புகிறது. 'அம்பலத் தாடுவான்' என்பது கூத்தப்பிரானானவன் சிவஞானமாகிய மன்றத்தே, இடமருங்கு தனிநாயகி காண, ஏழ்பெரும் புவனம் உய்ய, வையகம் பொலிய, மறைச்சிலம் பார்ப்ப, மாலயன் தேட, அருமறை முதலில், நடுவினில், கடையில், அன்பர் தம் சிந்தையில் அலர்ந்த திருவளர் ஒளியுமாய், மறைச் சுரும்பு விரும்பும் நன் பெரும் பரமானந்த நன் மதுவுமாய் நின்று, ஆனந்த எல்லையில் ஆதியும் முடிவுமில்லா அற்புதத் தனிக்கூத்து ஆடுகிறான் என்று அறைகிறது. 'குனித்த புருவமும்' என்று தொடங்கும் அப்பரின் அருந்தமிழ்ப் பாட்டு கூத்தப்பிரானின் திருஉருவ அமைப்பை மிக அழகாக எடுத்துக் கூறுகிறது.

இது வரையில் கூத்தப்பிரானின் திருஉருவ அமைப்பின் எழிலைக்கணடோம். இனி அவ்வெழிலுடன் அத்திரு உருவ அமைப்பில் அமைந்த தத்துக் கருத்துக்களைப் காண்பாம்.

கூத்தப்பிரானின் திருஉருவ அமைப்பானது சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தன்னுள்ளே ஒரு முகமாக அடக்கி அவற்றின் அறிகுறியாக நிற்கின்றது. இப்பிரானைப் பின்னொட்டி ஒழுகி நிற்கும் 'ப்ரபை' எனப்படும் திருவாசி இறைவனின் மற்றைய திருவுருவங்களுக்கமைந்த திருவாசியினும் சிறந்ததாகும். மற்றைய திருவுருவங்களுக் கமைந்த திருவாசியானது, அத்திரு உருவங்களினின்றும் வேறுபட்டு, தனியாக நிற்பதாம். ஆனால் கூத்தப்பிரானின் திருவாசியோ அப் பிரானின்றும் தனித்து வேறுபடாது, அவனது திரு உருவ அமைப்பில் ஒன்றாகக் கலந்து நிற்கின்றது. இதுவே இத்திருவாசியின் தனிப்பெருஞ் சிறப்பாம். இத்திருவாசியே 'ப்ரணவம்' எனப்படும் 'ஓங்கார'மாகும். கூத்தப்பிரான், அவ்வோங்காரத்துள்ளிருக்கும் உள்ளொளியாகிய திரு ஐந்தெழுத்தாம. இவ்வுண்மையை, சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாகிய 'உண்மை விளக்கம்' என்னும் நூலிலுள்ள 'ஓங்காரமே நல் திருவாசி' என்ற செய்யுளால் நன்கறியலாம். திரு ஐந்தெழுத்தானது, தூலத் திரு ஐந்தெழுத்து, சூக்குமத்திரு ஐந்தெழுத்து என இரு வகைப்படும் தூலத்திரு ஐந்தெழுத்தாவது 'நமசிவய' என்பதாம். சூக்குமத்திரு ஐந்தெழுத்தாவது 'சிவயநம' என்பதாம். கூத்தப்பிரானின் துடியேந்திய வலது மேல் கை 'சி'கரமாகவும், வீசுகின்ற இடது கீழ்க்கை 'வ'கரமாகவும், உயிர்களைக்காக்கும் வலது கீழ்க்கை 'ய'கரமாகவும், எரியேந்திய இடது மேல்கை 'ந'கரமாகவும், முயலகன்மேல் ஊன்றிய திருவடி 'ம'கரமாகவும் அமைந்து கூத்தப்பிரானானவன் சூக்குமத் திருஐந்தெழுத்து என்பதை விளக்குகின்றன. இதை, 'சேர்க்கும் துடிசிகரம்' என்ற உண்மை விளக்கப் பாடலால் நன்கறியலாம்.

கூத்தப்பிரானின் ஊன்றிய திருவடி 'ந'கரமாகவும், வயிறு 'ம'கரமாகவும், ஓங்கிய திருத்தோள்கள் 'சி'கரமாகவும், திருமுகம் 'வ'கரமாகவும், திருமுடி 'ய'கரமாகவும் அமைந்து, கூத்தப்பிரானானவன் தூலத்திரு ஐந்தெழுத்து என்றும் விளக்குகின்றன. இதையும், 'ஆடும்படி கேள்' என்ற உண்மை விளக்கப் பாடலால் நன்கறியலாம். திரு ஐந்தெழுத்தானது எங்ஙனம் ஓங்காரமின்றித் தனித்து ஒலிக்குமோ, அங்ஙனமே கூத்தப்பிரானானவன் பிறதெய்வங்களின் உதவியின்றித் தானாகவே தனித்தியங்கும் ஆற்றல் பெற்றவன் என்பது இப்பாடல்களால் புலப்படும்.

கூத்தப்பிரானின் ‘ஐந்தொழில்’ நிகழ்ச்சியைப் பற்றி இனிக் காண்பாம். கூத்தப்பிரானானவன் தனது வலது மேல் கையில் உள்ள துடியை முழக்கி உலகப் பொருள்களைப் படைக்கிறான். பிறகு அவற்றைத் தம் வலது கீழ்க்கையினால் காத்தருளுகிறான். அதன்பின் ஊழி முடிவில் தனது இடது மேல் கையில் கொண்ட எரியினால், அவைகட்கு அமைதி அளிப்பான்வேண்டி அவைகளை ஓயாத பிறப்பிறப்பினின்றும் இளைப்பாற்றுவிக்கிறான். அடுத்து, உயிர்களைத் தன்னிடமிருந்து மறைத்து அவற்றைப் பாச வயப்படுத்தும் ஆணவ மலமாய முயலகனைத் தனது வலது திருவடியினால் அழுத்தி ஊன்றி, அதன் வலிமையைத் தன் திருஅருளால் குன்றச் செய்கிறான். முடிவாக எல்லா உயிர்கட்கும் தன் தூக்கிய திருவடியால் வீடுபேற்றை அருளுகிறான். இங்ஙனம் கூத்தப்பிரானின் திருஉருவ அமைப்பு ஐந்தொழிலை நிகழ்த்துவதாக அமைந்துள்ளது. இதையும். "தோற்றம் துடியதனில்" என்னும் உண்மை விளக்கப் பாடலால் நன்கறியலாம்.

இனிக் கூத்தப்பிரான் நிகழ்த்தும் மும்மல அழிப்பினை நோக்குவாம். கூத்தப்பிரான் முதலாவதாகத் தனது வலது மேல் கையில் கொண்ட துடியை முழக்கி, மும்மலங்களுள் ஒன்றாய மாயையானது நம்மை மயக்கா வண்ணம் உதறித் தள்ளுகிறான். பின்பு இடது மேல் கையில் கொண்ட எரியினால் கன்மமலத்தைச் சுட்டெரிக்கிறான். இறுதியாய் நின்ற மூலமாம் ஆணவ மலத்தைத் தன் வலது திருவடியால் அழுத்தி ஊன்றி அதன் வலியைக் குன்றச்செய்கிறான். இங்ஙனம் கூத்தப்பிரானின் திருவுருவ அமைப்பு மும்மல அழிவினைச் செய்வதாக அமைந்துள்ளது.

கூத்தப்பிரானின் திருஉருவமானது, ஓங்காரத்துள் விளங்கும் உள்ளொளியாயும், தூல சூக்குமத் திரு ஐந்தெழுத்துக்களாயும் ஐந்தொழில் நிகழ்த்தும் அவசரமாகவும், மும்மலம் வீழ்த்தும் முழுமுதலுருவாகவும் அமைந்து திகழ்கிறது. இதனாலன்றோ அப்பர் பெருமானும் ‘குனித்த புருவமும்’ என்ற திருப்பாட்டில், கூத்தப்பிரானின் இனிய திருஉருவ அமைப்பைக் காணும்பேறு பெற்றால் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று கூறிப் போந்தார். எனவே, அருள்வடிவாய் ஆனந்த நடமிடும்



அம்பலவாணனை நாம் நாடோறும் பரவி, அவனுடைய திருநாமத்தை நாவார நவின்று மகிழவேண்டும். யாவரும் வேண்டாத மனிதப்பிறவியை நாம் வேண்டிப்பெற்றுள்ளோமெனில், அது அவனுடைய ‘இனித்தமுடைய எடுத்தபொற் பாதத்தைப் போற்றிப் புகழ்ந்து வணங்கவன்றோ? அங்ஙனம் அவ்‘வரியானை, அந்தணர் தம் சிந்தையானை’ புந்தியாரப் போற்றிப் பேசாத நாளெல்லாம் பிறந்தும் பிறவா நாளே. எனவே எடுத்த பிறவியின் பயனை அடைய அவனுடைய ‘மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.’

---

# பெண்பால் நரசிங்கம்

[கோவை கிழார்]

நமது ஆலயங்களில் புதைந்து கிடக்கும் அரிய சிற்பங்களைக் கலைக் கண்கொண்டு நாம் பார்க்குமிடத்து, அவைகளை இயற்றிய சிற்பிகளின் ஆழ்ந்த அறிவையும் நுண்ணிய கருத்தினையும் பொலிந்து எழும்பும் உணர்ச்சியையும் என்ன என்று கூறுவோம். அப்படிப்பட்ட அரிய சிற்பம் ஒன்றைத் திருமுதுகுன்றம் தரிசித்தபோது கண்டேன்.

பெரியநாயகி யம்மன் (விருத்தாம்பிகை) கருவறையின் நாற்புறமும் சுற்றாலைத் திருவுருவங்கள் சின்னஞ் சிறு முடுக்குகளில் எழுந்தருளப் பெற்றிருக்கின்றன. அம்மன் கோயில் ஆனபடியால் ஒன்றிரு உருவங்களைத் தவிர ஏனைய உருவங்கள் எல்லாம் பெண்ணுருவங்களாகத் திகழ்கின்றன. சில உருவங்கள் கை, கால், முகம் முதலிய உறுப்புக்கள் சிதைந்து கிடக்கின்றன. சிதையா உருவங்களுக்கே வழிபாடு உண்டு; இந்த வகையில் ஒரே ஒரு திருவுருவத்திற்குத்தான் வழிபாடு நடைபெறுகிறது. அத்திருவுருவம் காளியின் திருவுருவமாகும்.

இனி அதற்கும் மேற்கே அம்மன் யாகசாலையின் வெளிப்புறம் காட்சியளிக்கிறது அதன் மேலண்டைச் சுவரில் ஒரு சிறு முடுக்கில் ஒரு அற்புதச்சிலை காட்சி அளிக்கிறது. இதற்கும் கை உடைந்திருப்பதினால் வழிபாடு இல்லை. வெகுநாளாகக் கவனியாத நிலையில் எண்ணெய் அழுக்கு நிரப்பப்பட்டு உருவத்தின் அழகுகளைச் சுவைக்கக்

கூடாத நிலையில் அத்திருவுருவம் காட்சி அளிக்கிறது. அத்
திருவுருவின் தலை சிங்க உருவம். உடல் பெண்ணுருவம்,
மார்பில் வெகு நன்றாக இரண்டு கொங்கைகள் தோன்று
-கின்றன. கைகள் நான்கு. இருப்பதில் வலது கைகள்
இரண்டில் மேற்கையில் துடியும் இடது கையில் சூலமும்
இருக்கின்றன. இடது கைகளில் மேல் கையில் ஒன்றும்
தெரியவில்லை. கீழ்க்கை உடைந்து இருக்கிறது. திரு
மேனியோ நின்ற பாவனையில் நடனம் ஆடும் நிலையில் இருக்
கின்றது. முழங்கால்கள் அகன்றும் அடிக்கால்கள் நெருங்கி
யும் இருக்கின்றன. ஒருஅடி நிலத்தில் அமர்ந்தும், மற்
றொரு அடி, குந்திக்கொண்டும் இருக்கின்றன. ஆடை சிற்ப
ரீதியில் செதுக்கப்பட்டுள்ளது. இந்த உருவம் எந்த தேவதை
யின் தோற்றம் என்பதை ஒருவரும் சொல்லுவாரில்லை.
கொங்கைகளைக் குறிப்பாகப் பார்க்காதவர்கள் அது நரசிங்க
அவதாரம் என்றார்கள். கொங்கைகளைப் பார்த்த பிறகு
திகைத்தார்கள். சிலர் சிம்புள் அவதாரம் என்றார்கள்
அவர்கள் முகத்தை நன்கு ஆராயவில்லை. சிம்புளுக்கு யாளி
முகம் அல்லவா? அதற்கும் பெண் தன்மை இல்லையே. சிலர்
இலக்குமி நரசிங்கமாய் இருக்கலாம் என்றார்கள். இலக்குமி
நரசிங்க உருவங்களில் இருவரும் ஒன்றான உருவத்தைக்கண்
டிருக்கமாட்டார்கள். நரசிம்ம மூர்த்தியின் மடிமீது இலட்
சுமி எழுந்தருளி இருக்கும் பாவனையோடு அத்திருவுருவம்
அமைந்திருப்பதைப் பார்த்திருக்கலாம். இந்தத் திருவுருவத்
தில் சிவ சின்னங்களான உடுக்கையும் சூலமும் இருக்கக்
காரணம் என்ன? திருமாலின் ஆயுதங்கள் இவ்வுருவத்தில்
இல்லை. ஆகவே, இத்திருவுருவத்தை இயற்றிய சிற்பி எந்த
இலக்கணங்களைப் பின்பற்றி யியற்றினானோ அறிதல் கடின
மாக இருந்தது.

நரசிங்கம் ஆணைகவே சிற்பங்கள் எடுத்துக்காட்டு
கின்றன. நாரசிங்கி என்ற ஒரு சத்தி இருந்ததாக எந்த
நூலும் கூறுகிறதில்லை. என்றாலும் இந்தப் பெரிய நாயகி
அம்மனுடைய பரிவார தேவதைகளில் நாரசிங்கி என்ற
சத்தி இருப்பதைக் கண்டால் இவ்வாறு பிற இடங்களிலும்
இருந்திருக்குமோ என்பது ஒருகேள்வி? தற்போது வழக்கத்
தில் இல்லாத சேட்டையின் (ஜேஷ்டாதேவி) திருவுருவம்
திருவானைக்காவிலும் கச்சி மேற்றளியிலும் இருப்பதைக்



காணலாம். அதன் வழிபாடு முன்னாளில் இருந்து தற்போது மறைந்தது. அதுபோலவே நாரசிங்கியின் திருவுருவமும் முன்னாளில் இருந்து தற்போது மறைந்திருக்கக்கூடும். அதற்குச் சான்றாக இந்தப் பெரியநாயகியம்மன் கோயிற் சிற்பமே இருக்கின்றது அல்லவா?

இனித் தேவீமான்மியத்தில் பராசக்தியாகிய ஜகதாத்திரிதேவி சும்ப நிசும்பர்களை வென்றபோது அம்மைக்குப் பரிவாரசேனா சமூகமாக மற்ற எல்லாத் தேவர்களின் சக்திகளும் சென்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அப்போது கௌமாரி, வராஹி முதலியோர்கள் சென்றார்கள். ஆகவே நரசிங்கத்தின் சத்தியாகிய நாரசிங்கியும் சென்றிருக்கலாம் அல்லவா? அதை ஆராய்ந்தால் பெரியநாயகி அம்மனின் சுற்றாலைத் தேவதைகளில் நரசிங்கத்தின் சத்தி இருப்பது இயல்பு அல்லவா?

இனி, பாகவதத்தில் திருமாலின் அவதாரங்களைப் பற்றிக் கூறுகையில் வராகமும் நரசிங்கமும் இரணியாட்சன் இரணியகசிபு என்ற அசுரர்களை வதைத்த பிறகு அப்போது அவ்வவதாரங்கள் அடைந்த கோபம் தணியவில்லை. தணியாத ஆவேசத்தினால் உலகமே அபாயத்தில் நின்றது. அக்கோபம் தணிவு அடைவதற்காகத் திருமகள் எழுந்தருளியிருந்து சாந்தப் படுத்தினாள். அவ்வாறு திருமகள் வந்த போதுதான் அவ்வவதாரங்கள் திருமகளை மடிமீது வைத்துக் கொண்டு சாந்தி உற்றன. அந்த நிலைமை காட்டுவதுதான் இலக்குமி வராகம், இலக்குமி நரசிங்கம் என்ற மூர்த்தியின் உருவங்கள். அந்தக்காலத்தில் திருமகள் அவ்வவதாரங்களின் திருமேனி உருவங்களையும் பெற்றிருக்கலாம் அல்லவா? "காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்" என்ற அப்பர் வாக்கு இங்கே தொனிக்கிறது என்று கூறலாம்.

மேலும், நரசிங்கத்தின் ஆவேசத்தைப் போக்க இறைவன் சிம்புள் ஆக வந்து வதைசெய்த ஐதீகம் இங்கே கூற வேண்டியதில்லை. திருமகளே நாரசிங்கியாக வந்து நரசிங்கனுடைய கோபத்தைத் தணித்த வகையில் அந்த மூர்த்தம் ஒன்று தோன்றிப் பின்னர் இறைவிக்குப் பரிவார தேவதையாக அமர்ந்திருக்கலாம் என்று ஊகித்தல் மிகையல்ல.

இதைக் குறித்து ஞானக் கூத்தர் அருளிய விருத்தாசல புராணத்திலும் 1941-ல் ஆலயத்தார் பதிப்பித்த

திருமுதுகுன்ற வரலாற்றிலும் யாதொன்றும் காணவில்லை. திருகோபிநாத ராவ் அவர்கள் இயற்றிய இந்து பிரதிமை கள் என்ற நூலிலும் காணவில்லை. ஆகவே, இத்திருவுரு வத்தின் தத்துவங்கள், தியான சுலோகம், ஆகம பத்ததி, இவைகளை அறிந்தவர்கள் எழுதி விளக்குவார்களாக.

---

## மெய்கண்டார் திருநாள் கொண்டாட்டம்

நமது சமாஜத் தலைவர் வேண்டுகோளுக்கிணங்க, மெய்கண்டார் திருநாள் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் மிகச் சிறப்பாக நடந்தது. நமது சமாஜக் கூட்டம் ஒன்று இராயப்பேட்டை குகாநந்த நிலயத்தில் சமாஜத் தலைவர் ராவ்சாஹெப் திரு. நல். முருகேச முதலியாரவர்கள் தலைமை யில் நடந்தது. திருவாளர், ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர் கள் பேசினார்கள். நாகர் கோயிலில் நன்னெறி மன்றத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாகச் சைவப் புலவர் பகவதிபெருமாள் பிள்ளையவர்கள் தலைமையில் நடந்தது. பல பேரறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

வழக்கம்போல் காஞ்சிபுரம் ஞானப்பிரகாசர் திரு மடத்தில் மெய்கண்டார் கழகத்தின் கூட்டம் திரு. ம. பா. அவர்கள் தலைமையில் நடந்தது. திரு. ம. சி. நித்தியாநந்தம் அவர்கள் மெய்கண்ட சந்தான வரலாறுபற்றி ஓர் அருமை யான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திரு. அருணை வடிவேல் முதலியாரவர்கள் சிவப்பிரகாசச் செய்யுள்களைப் பற்றி சைவ சந்தான நூல் வரலாறு, ஆசிரியர் வரலாறு களைத் தெளிவாகக் கூறி, மெய்கண்டார் சிவஞானபோதம் மொழிபெயர்ப்பல்ல தமிழ் முதல் நூலே என்பதை வற் புறுத்தினார்கள் தலைவரவர்கள் பரஞ்சோதி முனிவர் மெய்கண்டாருக்குத் திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால் தீக்ஷை செய்தாரென்றும், அருணந்திசிவம் திரு நோக்காலும் மறைஞான சம்பந்தர் பரிசத்தாலும் உமாபதி சிவம் திகழும் வாக்காலும் தீக்ஷை செய்தாரென்றும் கூறி னார். திரு. வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் அனை வருக்கும் நன்றி கூறினார்கள். திருமடத்தின் தலைவர் ஆசியுரை, ஓதுவார் மூர்த்திகள் இறைவணக்கம் வாழ்த்துக் களுடன் கூட்டம் நிறைவெய்தியது.

# சைவத் தேர்வு வினாக்கள்-1954

## சைவப்புலவர் தேர்வு-சைவ இலக்கியம்

7—11—1954 காலை 10—1] [மொத்தமதிப்பெண் 100

எல்லாவினாக்களுக்கும் சம மதிப்பெண்

1. "முற்றலாமையிளநாகமோடேன முளைக்கொம்பவை பூண்டு, வற்றலோடு கலனாப்பலிதேர்ந்து" என்பதிற் காணும் வரலாறுகளை விவரிக்க.
2. ஒருமைப் பன்மை மயக்கம், இழிவு சிறப்பு விகுதி, பூட்டு விற்பொருள்கோள், விகுதிமேல் விகுதி, செய்யிய என்னும் வாய்பாட்டு எச்சம் ஆகிய இலக்கண விசேடங்கட்கு முதல் திருமுறையுள் ஒவ்வொரு உதாரணம் எழுதுக.
3. முதல் திருமுறையில் காணப்பெறும் அழகிய உவமை களுள் ஐந்தினை விவரிக்க.
4. சிவபரத்வம் கூறும் பகுதிகளுள் முதல் திருமுறையில் ஐந்தினை விளக்குக.
5. சிவலிங்கம் குறிக்கும் உண்மைகளைச் சேக்கிழார் எவ்வாறு விளக்குகிறார்?
6. "சைவநெறியல்லவற்றுக்கில்லை" என்று சேக்கிழார் கூறுவன யாவை?
7. சமயப்பொருள்கள் பொதிந்துள்ள உவமைகளுள் சேக்கிழார் கூறும் ஐந்தினை எழுதுக.
8. தொண்டர்கள் வரலாற்றில், இறைவன் வேண்டுமென்றே துன்பங்களை நுழைவிப்பதின் நோக்கத்தை, மூன்று நாயன்மார்கள் வாழ்க்கையில் விவரித்து விளக்குக.
9. திருக்குறள் கூறும் ஒழுக்க நெறி முப்பொருளுண்மையை அடிப்படையாகக் கொண்டதெனும் கருத்தை விளக்குக.
10. திருக்குறளில் "மெய்யுணர்தல்" எனும் அதிகாரம் சைவ சித்தாந்தம் உணர்த்துவதே ஆதலை விளக்கி ஒரு சிறு கட்டுரை வரைக.

## இளஞ்சைவப்புலவர் தேர்வு- சைவ இலக்கியம்

7—11—1954 காலை 10—1] [மொத்த மதிப்பெண் 100

1. 'விநாயகர்" எனும் சொல்லிலுள்ள பலபொருள்களை விளக்குக. 8
2. விநாயகர் உருவ அமைப்பிலுள்ள நுட்பங்களையும், அவர் கைகள் செய்யும் வேலைகளையும் விளக்குக. 8
3. பரமசிவத்தின் ஒன்பது பேதங்கள் எவை? 9
4. காபாலி, பிக்ஷாடனன், த்ரிபுராந்தகன் என்பவற்றிலுள்ள வரலாறுகளைச் சுருக்கமாக எழுதுக. 9
5. "எண்குணத்தான் தாளை" எனவரும் திருக்குறட் பகுதிக்குச் சைவர்களும் ஆருகதரும் கூறும் எண் குணங்களை எழுதுக. 8
6. சிறப்பொடு பூசனை, ஒழுக்கத்து நீத்தார், தென்புலத்தார், தொழுதெழுவாள், புறத்துறப்பு எனுமிவைகட்குப் பரிமேலழகர் கூறும் சிறப்புரைகளை எழுதுக. 10
7. முடிகையினாற் றொடுமோட்டுழவர் முன்கைத் தருக்கைக் கரும்பின்கட்டிக் கடிகையினாலெறி, ஈறாய் முதலொன்றாய்...பூதம் அவைஐந்தாய் ... வேறாய் உடனானான், அறிநீர்மையில் எய்தும் மவர்க்கறியும் அறிவருளி, தரையொடுதிவிதலநலிதரு தகுதிறலுறு சலதரனதுவரையனதலை, துஞ்சவருவாரும் தொழுவிப்பாரும், வழுவிப்போய் நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும், ஆகிய சொற்றொடர்கட்குப் பொருள் எழுதுக. 25
8. "தோடுடைய செவியன்" எனும் பாசுரத்திலுள்ள பற்பல கருத்துக்களைப்பற்றி இரண்டுபக்க அளவில் ஒரு கட்டுரை எழுதுக. 12
9. இராவணன் கயிலையெடுத்தது, அரியும் அயனும் அடிமுடி தேடியதுபற்றிய குறிப்புக்களைப் பதிகம் தோறும் திருஞானசம்பந்தர் ஓதுவதின் உட்கருத்தைத் தெளிவாக விளக்குக. 6



10. முதல் திருமுறையுள் முதல் ஐம்பது பதிகங்களில் அகத்துறையுள் அமைந்தவற்றில் ஐந்து பாசுரங்கள் கூறுவதைச் சுருக்கமாக எழுதுக. 5

---

## சைவப்புலவர் தேர்வு - சைவ சாத்திரம்

7—11—1954 மாலை 2—5] [மொத்த மதிப்பெண் 100

எல்லா வினாக்களுக்கும் சம மதிப்பெண்

1. சிவஞானபோத முதற் சூத்திர அதிகரணங்கள் எவை? அவை சூத்திர மூலத்துள் நிற்கும் முறை எவ்வகைத்து?
2. இரண்டாம் சூத்திரத்தில் "ஆணையின்" எனும் சொல் சிங்க நோக்காய் இயைந்து பொருள் தருதலை விளக்குக.
3. இலதென்றலின் ஆன்மா உளது, ஒடுக்கமறிதலின் உளது, உணர்த்த உணர்தலின் உளது எனும் மூன்று அதிகரணப் பொருள்களை விவரிக்க.
4. முதல்வனுடைய தடத்த லக்கணம் சொரூப லக்கணம் பற்றி, இரண்டு பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.
5. பாண்டிப் பெருமாள் விருத்தியும் சிவஞான சுவாமிகள் உரையும் வேறுபடும் இடங்களுள் இரண்டினைத் தெளிவாக விளக்குக.
6. ஐவகைச் சங்காரங்கள் எவை? "சங்காரகாரணனாயுள்ள முதலையே முதலாக உடைத்து" என்பதிலுள்ள நுட்பம் யாது?
7. "சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்" என்பதை நன்கு விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.
8. ஆணவமலத்தைப் பற்றிப் பல சமயத்தவரும், சைவ சித்தாந்திகளும் கூறுவன யாவை?
9. "அத்துவிதம்" என்பதுபற்றிப் பல சமயத்தவரும் சைவ சித்தாந்திகளும் கூறுவன யாவை?

10. சுத்தமாயை அசுத்தமாயை என்பன யாவை? அவற்றால் வரும் தத்துவங்களின் தொகை வகை விவரங்கள் எவை?

---

## இளஞ்சைவப்புலவர் தேர்வு-சைவசாத்திரம்

7—11—1954 மாலை 2—5] [மொத்த மதிப்பெண் 100

ஒவ்வொரு வினாவிற்கும் மதிப்பெண் 10

1. "அகரஉயிர் போலறிவாகியெங்கும்" என்பதிலுள்ள நுட்பங்களை விவரிக்க.
2. "கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும் திண்திறல்"—விளக்கவுரை எழுதுக.
3. "இருட்பாவைக் குண்டென்றும் கணவர்க்குந் தோன்றாத கற்பு"—விளக்குக.
4. "பாற்கலன்மேற்பூனைகரப்பருந்தநாடும்" என்பதிலுள்ள சாத்திரக் கருத்துக்களை விரிவாக எழுதுக.
5. "விரியமநமேவியவ்வை மீளவிடாசித்தம், பெரியவினை தீரப்பெறும்" என்பதிலுள்ள சாத்திரக் கருத்துக்களைத் தெளிவாக விளக்குக.
6. ஐந்து சக்திகளின் பெயர் தொழில்களை விவரமாக எழுதுக.
7. தன்னியல்பு பொதுவியல்பு, தன்வேதனைக்காட்சி, பைசந்தி, அங்கப்ரத்யங்கம், மிச்ராத்துவா, எனுமிவைகளைப்பற்றிக் குறிப்பெழுதுக.
8. பரமேசுவரனும் ஆன்மாவும் ஆண்டான் அடிமை எனும் முறையில் உள்ளதை அருணந்திசிவாசாரியரும் சிவாக்ரயோகிகளும் எவ்வாறு விளக்குகின்றனர்?
9. "சிவனுருவருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன், பவமுதற்றொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானுமல்லன்" என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.
10. சிவஞானசித்தியார் முதற்சூத்திரப்பொருளை முறைப்படுத்தி, இரண்டு பக்க அளவில் எழுதுக.

# சிவஞான தீபம்

(மலர் 27 ; இதழ் 10 ; 368-ம் பக்கத்தொடர்ச்சி)

**அ**ந்தகாரக்கிருகத் தகப்பட்ட பொருளினைப் புன்புலாற் கண்ணுடைய வொருவன், விழித்து விழித்து நோக்கியுங் காண்ப தில்லை. அப்படிக் காணாமையால், அங்கே யாதொரு பொருளுமில்லையென்று அவனுரைப்பதுபோல, ஆணவ மல விருளிற் கிடந்தவாறே சிற்றறிவுஞ் சிறுதொழிலுங் கொண்டுள்ள நாத்திகரு முரைக்கின்றார். அவர், எவ்வாற்றாற் கடவுளைக்காண ஆள்வினை புரியினுந் தம்முடை யோசனையாலேனும் புலால் விழியாலேலுங் காணார்; விகசித போதமாகிய ஞானதிருட்டியுடையாரே காண்பர். நிற்க.

**தூ**லவிழி தூலசடத்தையும், சூக்குமவிழி சூக்குமசடத்தையு நோக்கு நீர்மைய வென்னும் முறை மறுத்து, முகத்திலுள்ள வூனக்கண்ணையன்றி யகத்திலுள்ள ஞானக் கண்ணின்றென்றுங், கண்டதே காட்சி கொண்டதே கொள்கை யென்றுங் கதைக்கும் அனீசுரவாதிகள், துயிலுங்காற் கனாக்கண்ட கண் யாதென்று தீர்வைசெய்யவுள்ளார்! மனஞ் சென்றவாறே கூறிக்கொள்வது அவர் மாண்பு போலும்!!

**பி**ரத்தியக்ஷ மாத்திரையே யாம் நம்புவோமென்னு நாத்திகர், தம்மையீன்றா ளின்னாளென்பதை யெவ்வாறு நம்பினர்? என்னுங் கடாவுக்கு அது கண்டவர் சொல் வழியே யென்பதை, விடையாயிருப்பா மென்பராயின், கடவுளைக் கண்டவர் சாற்றிப் பொறித்த சாத்திரத்தின்படி கடவுளுண்டென்பதையு மவர் நம்பாதொழிவ தென்கொலோ? எனக் கடாவுக. மேல், தன்னை யீன்றதைத் தானறியாவிடினும் பிறர் மகவீனுவதை நாங் காண்டலானது பிரத்தியக்ஷமன்றோ வென்பரேல், கடவுள் சகசிருட்டி செய்ததை நாங் காணாவிடினுங் குடத்தைப் பண்ணுவது குலாலனென்று நாம் பார்த்தபடி அதுவும் பிரத்தியக்ஷமென்றெண்ணாமை யென்னே! என்க. மேல்.

**க**டவுளிருப்பின், அக்கடவுள், கொலைமுதலிய பிழை செய்தாரை யவ்வப்போதே யடக்கியாளாது வாளாவிருத்த லென்? என்றும் அவர் வினவுவரேல், எந்த அனீசுரவாதி

காலவயப்பட்டொழியா திங்கிருக்கின்றனன்? என்னும் வினுவுமெழு மென்பதை யவர்க் குணர்த்தலாம். மேல். பிருதிவி முதலிய பூதங்கள் வலிமெலி வுறாத வியல்பாதலின் ஒரு மனிதன் ஒழிவுமங்ஙனமாமென அவர் கூறுவரெனின், கடவுளா னல்கு வினைப்பய னளவாகவே அதுவுமா மென் றும், ஒருவன் வினை செய்த காலம் ஒருவிதையை விதைத்த கால மொக்கும்; அவ்வினை யனுபவகாலம் விதை முளைத்து வளர்ந்து காய்த்துப் பழுத்துப்பலன்றரு கால மொக்குமென் றும், அப்பலனல்கு காலம் பெரும்பான்மையும் மறுமையில் வைத் தெண்ணப்படுமென்றும், சுதந்திரமான உபகார தரும முயிர்கட்குண்டாகி அவ்வழியு முய்திபெறுமாறு மறுமையிலே நியாய மேற் படுமென்றுஞ் சற்சாத்திர நிபுணர் சாற்றுவரென வவர்க்கறிவுறுத்தலாம். சீவான்மாக்கண் முன்னிழைத்த கன்மத்துக்கீடா யிப்பொழுது தனுபவிக்குஞ் சுபா சுபங்களை விவரித்து நிகழ்கால வனுப வத்தா லவ்விவரத்தை யுறுதிப்படுத்தாநின்ற கமலமாமுனிவ ருடைய பண்டைத் தமிழ் நூலொன்றனை யாங் கண்டது முண்டு; சோதித்துண்மை யுணர்ந்தது முண்டு.

பட்டினத்தடிகளுடைய சீடராய்த் திருவிடை மரு தூர்ச் சிவாலயத்தின் மேற்கு வாயிலில் வைகிய பத்திரகிரி யாரால் அன்னமளித்துக் காக்கப்பட்டு வந்த வொரு பெண்ணுயானது, அவரது கைப்பாத்திரவடியுண்டு மரண மாகிக் காசிராசனுக்கு மகளாய்ப்பிறந்து அவ்விடம் விட்டுத் திருவிடைமருதூரை யடைந்து பத்திரகிரியாரைத் தரிசித்து "அடிநாய் மீண்டுந் திருவருட் பேற்றிற்கே வந்தது" என்று பணித்துப் பணிந்து அவரோடு சிவச் சோதியுட் புகுந்து முத்தியடைந்த மெய்ச்செய்தி, உயிரிற்கு* இறப்பும் பிறப்பு முளவென்பதை யினிது நிறுவுமாகலின் இஃது மிங்குக் கருதிக்கோடற் பாலதன்றே?.

நாத்திக மறுப்பாக இங்ஙனம் பல கூறப்பட்டன. இவற்றினின்று மோருண்மை யினிதுணரக் கிடக்கின்

*உயிரிற்கு இறப்பும் பிறப்பும்உயிர் தங்கியிருக்கும் உடம் பிற்கு என்பது பொருள் - ம. பா.



றது. என்னை? பிண்டத்துள்ள நீர், நெருப்பு, காற் றென்பவற்றிற்கு வேருய் ஆதாரமாய் அண்டத்தி னம் மூன்று மிருத்தல் ஆகமவளவை அனுமானவளவை யல்லாத காட்சியளவை யாகலின், இவ்வளவை வழியே பிண்டத் துள்ள அறிவிற்கு வேருய் ஆதாரமாய் அண்ட முதலிய எக்கண்ணுமொருபேரறிவிருத்தலறியப்படுகின்றது; அதுவே கடவுளெனப்படுவதாகலின். இவ்வளவை, நாத்திகவாயை நனி யடைத்தற்கு நல்ல கபாட மாமென்பதை யெந்த விவேகி யறியாதொழிவன்? மாயையின்றேன் மத தருக் கங்களுஞ், சிவமின்றே லறிவின் மேம்பாடு மில வென்னு நிச்சயத்தை யெந்த மந்தமதி யுணரவுள்ளான்?

எல்லாம் வல்ல தெய்வம், ஆன்மானுக் கிரகார்த்தந் தடத்தலக்கண உருவாயிராதெனற்கு மிடனின்று.

## நான்காவது

## பாவபரிகாரவிவரவியல்

ஒருவனுடைய சீவன் மறைபொருளா யிருப்பதுபோல, ஆற்று பாவ புண்ணியங்களும் அவற்றிற்குப் பலனளிக்குந் தெய்வமு மறைபொருளா யிருக்கின்றனவாகலிற் பாவத்தை யும் புண்ணியத்தையு மனிதர் கருதிப்பாராது அகஞ்சென்ற வாறு நடப்பவராயினர். மேனெடுத்தபடி தெய்வமுண் டென்னு நிச்சய மொருவனுக்கு உறுதியாயுண்டாயின் அவன், இரகசியமாகு மெவ்வித பாவத்தையு மியற்றுமே அரசனாணைக்கு அஞ்சி நடந்தாங்கு நடப்பன். ஒருவன் பாவஞ்செய்து மேன்மையா யுயிர் வாழ்வதினும், இழி தொழிலாளர்க்கு ஊழியஞ்செய்து உண்ணன் மிகவு நன்று.

பரகதியெனுஞ் சுகத்தை நல்கும் அருளெனும் பரமௌ டதத்திற்குப் பத்தியமுறிவு பாவமென்னும் பதார்த்தமாம்.

ஆன்மார்த்த பரார்த்த பூசைகளி லுதவப்படு நறும் பண்டங்களைப் பரம்பொருள், திருத்தி மாத்திரையே அங்கீ கரிப்பதன்றி அனுபவித்து ஆனந்திக்குமெனல் பொருந்தாது; அக்கினியாற் குளிரை நீக்கிக்கோடன் மான் அப்பரம

காரியத்தாற் பாவநீக்கமும் புண்ணியமும் பெறலாமென்றல் பொருந்தும் ; பரம்பொருள் பசிமுதலியவற்றான் வருந்து முயிரன் றாகலின்.

## ஐந்தாவது

## பரமேசதரிசனாதிபோதகவியல்

கடவுள் சொரூபத்தைத் தரிசித்தல், தன்னைத் தரிசித்தா லன்றிக் கூடாததாம். அது முத்துச்சிப்பியின் மாமிசத்தை நீக்கித் துணிசெய்யு நித்திலத்தைக் காண்டலென ஞானத் தாற் காணத் தக்கது. அந்த ஞானம் எவ்விதம் விருத்தியா மெனின்,—மேனுவலப்பட்ட யாவு முணர்ந்து பின்னைக் கழறப்படுங் கட்டளைகளின்படி நடந்துகொண்டு ஈசுவரப் பிரீதியா யிழைக்குஞ் சற்கரும புண்ணியஞ் சித்தசுத்தியை நல்குமாற்றான் மீக்கொள் ஈசுவரத்தியானயோகம் ஞானத்தை நல்குமென்க. மறுமைப்பலன் விழைந்து காம மாக வியற்றுஞ் சற்கருமங்கள், அவைகளை யனுபவிக்கப் பிறவியை நல்குமென்க. பாவஞ்செய்வார் அதனை மறைவா கச்செய்து பலன்பெறல்போலச் சற்கரும புண்ணியஞ் செய்வாரும் அதனை மறைவாகச்செய்து பலன்பெறல் வேண்டும். பாவஞ்செய்தார் வியசனித்து அதனை வெளிப் படையாய்க் கூறிக்கொளலால் அப்பாவத்தை யழிப் பவராமாறு புண்ணியஞ் செய்தாரும் அப்புண்ணியத்தைப் புகழ்ந்து கூறிக்கொளலால் அதனை யழிப்பவராவர் ; உய்த் துணர்ந்துகொள்க.

ஒருவன் ஞானியான பின்னரும் அவன், சற்கருமம் புரியவேண்டாவோ? எனின்,—பிராரத்தந் தவிர ஆகாமியஞ் சஞ்சிதமென்னு மிரண்டும் ஞானியைப்பற்றா தொழிதலா னும், பிராரத்தமாகிய கறங்கு சுழலுங்கா லதன்கால்போல அவ னசையா திருத்தலானும் அது வேண்டாவென்றே கூறலாமாயினுங் கட்டாயமொன்று மின்று; தாமரையிலைநீர் போல்வா னாகலினென்க. ஞானியாதற்குமுன் ஆற்றிய புண்ணிய கருமங்களைத் தன்னை விசுவாசித்தவர்கள் பாலும், பாவ கருமங்களைத் தன்னை நிந்தித்தவர்கள் பாலும் ஒப்பு



வித்துவிட்டுப் பாவ புண்ணிய சருமரகிதனாய்ப் பிரகாசிக்கத் தக்கவனு மிவனே. ஞானி செய்யுஞ் சற்கருமம் அவனைப் பந்தப்படுத்தாது நிற்றல், உயிர்களின்பொருட்டு ஈசுவர னுதவாநின்ற புண்ணியகருமம் அவ்வீசுவரனுக்குப் பலன் கொடாது நிற்றலை யொக்கும்.

வேதத்தினுடைய கருமகாண்டத்தில் யாகாதி சற்கரு மங்களே இன்பமீயுமென்றியம்பியதுமுண்டு. அது,மண்டின்ற குழவியி னழுங்கலுக்கு நல்ல ஒளடதமூட்டு நிமித்தந் தித்திப்பான பண்டங்களை முன்னர்காட்டி யழைத்தலைச் சிவணும். இலெளகிக இச்சையுள்ளார், பற்றறு நிலைக்கள ஞானத்தைப் பொருந்தாரென்பதை யுத்தேசித்து அநித்த ஊர்த்துவலோக போகங்களையேனு மெய்துகவென்னுங் கருணையானே விதிக்கப்பட்ட விது, பூருவபக்ஷ முடிபிற்றாம்.

வைத்து மறந்துவிட்டபொருளை ஞாபகத்தாற் கண்டு பிடிப்பதன்றிக் கருமத்தாற் கண்டுபிடிப்பதில்லை. அது போன் மறதியான அஞ்ஞானம் அந்தர்முகமாகியபரமான்ம சிந்தனையாலே நசித்து, ஞானந்தோன்றிய ஞான்று தன் னுடைய முற் பிறப்புக்களையெல்லா மொருவனறிதல் கூடும் ; கருமத்தாற் கூடுவதன்று. அற்றேல், விருத்தி யாகிற ஞானமு முயற்சியின் பாற்படுதலின் அது கரும மாகாதோ ? என்னு மோராசங்கை இங்கே தோன்றும். அது, புருடதந்திரமாகிய தேற்றுமர விதையி னுரைப்பிலாங் குழம்பானது வத்து தந்திரத்தாற் சேற்றை நீரினின்றும் பிரித்து அச்சேற்றோடு தானுந்தாழ்ந்து போதல்போல அக்கருமமுமாமாற்றா னொழியும். இவ்வித தந்திரம், ஏனைய கருமங்களி லின்மையாற் பை முதலிய நாற்றிறயோனி, தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன,தாவர மென்னு மெழுவகைத்தோற்ற மென்பவைகளினும் உயிர் பிறந்திறந் துழிதரும். அவ்வாறு பிரதம சிருட்டி முதல் இன்றுகாறு முடிவில்லா துழிதரு மான்மாக்கள், வீடு பெறுவதற்கு இந்நூலிற் சொல்லப்படு மொருஞானமே விரும்பல் வேண்டும்.

இஞ்ஞானமு மிதனை விருத்திசெய்யக்கூடிய நிட்காம
ஈசுரபத்தி விசுவாசமுமே எவர்க்கும் பொதுவாகவுள.
இவையேயுமன்றி சுருதி, தேவாரம், திருவாசகம், திருப்
புகழ் முதலியவற்றைப் பாராயணம்பண்ணல், சிவ சரிதங்
களைச் சிரவணஞ்செய்தல், விரதங்களையனுட்டித்தல், தேவப்
பிரீதியான திவ்விய பாடல்களைப்பாடி மாலையாமாறு
செய்தல், சிவநாம மந்திரங்களைச் செபித்தல், தீர்த்தங்
களாடல், கோதான முதலிய தானங்களைச் செய்தல்,
சிவதொண்டு செய்தல், தொண்டர் தொண்டு செய்தல்
என்பன முதலிய பலவித நிட்காம கருமங்களும் முத்திக்குச்
சாதனங்களேயாம். இவற்றுள், சிவபூசையினின்றுந்
தொண்டர்க்காற்றுந் தொண்டு விசேடமாம். அதுபோலச்
சிவாதிக்கிய குரு கடாக்ஷப் பிரம ஞானோபதேசத்தினு
லான்மாவாகிய தன்னை யறிதலும் வீடுபெற நிற்றலின்
விசேடமாம். சிவஞான சொரூபிகளாயுள்ள அடியார்க்காற்
றுந் தொண்டால் இல்லறத்தார்களுந் துறவறத்தார்களு
நற்கதி பெறலாம். இதற்கொரு காட்சியளவை காட்டுதும்.
அது வருமாறு:—

திருவிடைமருதூர்ச் சிவாலயத்தில் வைகிய திரு
வெண்காட்டடிகளெனும் பெயரிய பட்டினத்தாரும் அவ
ருடைய சீடராய பத்திரகிரி யரசரும் புசித்தெஞ்சிய உச்
சிட்டப் பிரசாதத்தையே உண்டுகொண்டிருந்ததும், அவ்
வரசர் தமது கைப்பாத்திரத்தைக் கீழேயெறிந் துடைத்த
போது அஃதடியுண்டு மரித்துவிட்டதுமான ஒருபெண்ணாயி
னுயிரானது, காசிமன்னனுக்குக் கனிஷ்டைப்புத்திரியாய்ப்
பிறந்து வளர்ந்துவரு ஞான்று அவளது பருவங் கருதுபு
அரையன் மணமகன் விசாரித்த தோர்ந்த அப்பெண்மணி,
இடைமருதூர்ச் சிவாலயத்தின் மேலை வாயிலிலே நிட்டை
கூடியிருப்பவர் எனக்கு நாயகனுவார்: அவர்பா லென்னைச்
சேர்ப்பது நுங்கள் கடனென்று வேண்டுதல் செய்து
கொண்டபடி செய்வித்த, அவ்வரையன் முதலியோர்
காதுகளுங் கேட்கவே கண்களுங் காணவே பத்திரகிரி
யடிகள், அப்பெண்ணினுடைய பூர்வ வர்த்தமானமெல்லாம்



அவண்மொழி வழியே கேட்டபின்றை அவளது கரமலரைப்
பற்றிக்கொண்டு சென்று கீழை வாயிலிலிருக்கின்ற
குருநாதரைத் தரிசித்து நின்று "சுவாமி! நின் உச்சிட்டப்
பிரசாத முண்ட நாய்க்கும் மறுபிறப்புண்டோ?" என்று
வினவலும் அது செவி மடுத்த அக்குருநாதர், "அது சிவ
சம்மதம், யாமென் செய்யலாம்" என்று கூறித் திருவுளத்
தைச் சிந்தித்த வுடனே அங்கே பரஞ்சோதி தோன்றிப்
படர்ந்தது. அதற்குள் அப்பெண்ணும் பத்திரகிரி யடிகளும்
புக்குப் பிறவாப்பே றெய்தினர்க ளென்னுந் திவ்விய
சரிதையாம்.

மேற்பணித்த நிச்சயத்திலுண்டாம் பதிஞானப் பலனு
னது, விவசாயிக்கு முன்னர்த் துன்பமும் பின்னர் இன்பமு
முண்டாதல்போலப் பொருந்துவதாகும். அவிவேக
அகிருத்தியத்தி லுண்டாம்.பலன்,வியபிசாரி யனுபவம்போல
முதலி லின்பமும் பின்பு துன்பமுமாகப் பொருந்துவதாகு
மாதலின், ஞான பக்குவியானவன், முன்னங் கூறியுள்ள
காமாதி சித்தவிருத்தி பதினன்கையுமகற்றி,அடியிற்கூறப்படு
கட்டளை பதினைந்தையுங் கைக்கொண்டு, அவற்றுட்
குறிக்கப்படு தீமைகளைச் செய்யாமலுஞ் செய்விக்காமலுஞ்
செய்ய வுடன்படாமலு நீங்கியிருத்தல் வேண்டும். கட்டளை
விவரம்:—

(க) பொய் புகலாமை, (உ) கள்ளஞ் செய்யாமை,
(௩) இலாகரிப்பொருள்களுண்ணுமை, (௪) கொலை பண்
ணுமை, (ரு) குருநிந்தை செய்யாமை, - பொய் முதலிய
இவ்வைந்து மாபாதகமும் பொருந்தாதிருத்தலே சிறந்த
சைவாசாரம். இலாகரிப்பொருளுண்ணு ஆசாரத்திற் புகைச்
சுருட்டுபயோர்கப் புடுத்தாமையுஞ் சேரும்.

(௬) துட்டசகவாச நீத்தல், (எ) வைதிகசைவ சாது
சங்க சகவாசம் விரும்பல், - கல்விச் செல்வரைத் தபோதன
ரைக் காண்டொறுங் காண்டொறும் பொருமைப்படுவாருட்
சிவசின்னதாரண முடையாரு மிருப்பர்; அன்னோர்சகவாச
முந் துட்ட சகவாசமாம்; விரும்பற்பாலதன்று.

186906.

(அ) வீண் கதைகளைப் படியாதொழிதல், (கூ) உண்மைக்கு மாறுகோளாம் புத்தகத் திரிபுகளைக் கண்டு மயங்கா திருத்தல், (க0) எல்லா மனிதர் முன்னும் அன்பாகப்பேசல், (கக) பிறன்மனைவி யெத்துணைப் பேரழகினளாயினு மவளைத் தாயாக மதித்தல், (கஉ) எல்லா மனிதரையுஞ் சகோதரராகப் பாவித்தல், (கங) எல்லா ருள்ளமுந் தன்னை விழையுமாறு அடங்கி நடத்தல், (கச) குருவிசுவாசம் பிறங்க நிற்றல், (கரு) "அளவிலா மறைக ளாகமமு நாடரிய" குமாரக் கடவுளுடைய செந் நோன்றுள்களை மறவாப் பத்திமை கோடல் என்னுமிவை. இவற்றுள், ச-வது சொலைபண்ணுமை யென்றது தானே ஜீவகாருண்ணிய மெனவும்படும். இக்காருண்ணிய மெய்தின் ஈசுவரபத்தியுண்டாம். இஃதுண்டாயிற் சிவத்தியானயோக முண்டாம். இஃதுண்டாயிற் சிவானுக்கிரக சிவஞானமுண்டாமாகலின் வீடுபேறு விழைவோர் இந்நான்கினையு நன்குணர்ந்து அப்பேறு பற்றக் கடன்மைப்பட்டவரு மாவர். உயிர்களை யுபாதிப்படுத்தல் சாலவுங் கேடாய்முடியு மென்பதையும், ஊனுண்ணும் பொருட்டுக் கோறல்புரிதலு முயிர்க் கொலைதா னென்பதையும்—

"கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலும்
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலுஞ்
சங்கையில் லாத ஞான சாத்திர முணர்ந்திட் டாலும்
பொங்குறும் புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென வுயர்ந்தா னேனும் மனமய லகன்று னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனும்
இலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே.

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்
கொலையின னளிக்கு மன்னங் கூறல்வல் விடம தாகுங்
கொலையின னளிக்கு மன்னங் கொடும்பவ மளிக்கு மூலங்
கொலைஞர்தம் மனையி லுண்பான்கொலைஞனேயாவனன்றே.

இத்திற னருள்கைப் பற்றி யுயிர்க்கெலா மிதத்தைச் செய்க
சத்திய மிரக்க மின்றேன் முத்தியைச் சார்கி லார்சற்



பத்தியால் யோகஞ் சாரும் யோகத்தாற் பரம ஞானஞ்
சித்தியா மிதற்கா தாரஞ் சீவகா ருண்ய மன்றே."

என்று பஞ்சாக்ஷரப் பதிபசுபாச விளக்கம் பகர்தலினறிவதோடு எமது சிவஞானதேசிகத்து உக-ஆம் வியாசமாகிய சீவயாதனு வியாசத்தையும் படித் தினிதறிந்து கொள்க. அது கவினுடைத்து.

எப்பாடையி லெவராலெழுதப்பட்ட புத்தகமாயினும் அதனுள், நல்லன காணப்படின் அவற்றைக் கோடலும், அல்லன காணப்படின் அவற்றை நீத்தலும் உயிர்நலன் விரும்புநர் செய்கையாதலின், தமிழ்மறை வழியாக வடமொழியு மெமது சொந்த பாடையேயெனக் கொண்டு நல்லன கொள்ளாது அம்மொழிவிலக்கிப் பகைபாராட்டுவாரை நேசியாதிருத்தலும், யாதானுமொரு நூல் உயர்வுடையார் வாக்காகக் காணப்படினும் அந்நூற்கு உலகின்கண் வழங்கி வரூஉம் எழுத்துக்களுஞ் சொற்களும் உபயோகிக்கப்பட்டபடி கதானுகத நியாயமாக உலகின்கண் வழங்கிவரூஉந் தவறான விடயங்களும் நவீன கற்பனைத் தலபுராணக் கதைகளும் உபயோகிக்கப்பட்டிருக்குமெனா எண்ணலும், எண்ணியவாறு காணப்படின் அவற்றைக் களைதலும், ஈசுவர சிருட்டியிற் பயிரிடுவோரும் வர்த்தகமிழைப்போரும் உத்தியோகமுஞற்றுவோரும் கைத்தொழில் புரிவோரும் கூலிவேலை யயர்வோருந் தோன்றுதல்போலக் கல்வித்தொழிற் கலைஞர்களுந் தோன்றுவரென எண்ணலும், அப்பயிரிடுவோர் முதலாயினருட் பொய்யரு மெய்யருமிருத்தல்போலக் கலைஞர்களுள்ளும் பொய்யரு மெய்யருமிருப்பராகலின் அவர்களுடைய இலிகிதங்களுட் சுயநலங்கருதிய பொய்யுந் தோன்றுதல் அதிசயமன்றென எண்ணலும், இத்திறத்தோர் முன்னுளேயிருந்தார் இந்நாளேயிரார் இனியும் வாரரென்றற்கு மோரியை பின்மையின் இக்காலத்தும் வருங்காலத்துங் காணப்படுவோரேயாவரென எண்ணலும், உண்மையுணர்தலும் "புத்தகத்திரிபுகளைக்கண்டு மயங்காதிருத்தல்" என்றதிற் சேரற்பாலனவாம்.

மேலே கூறிப்போந்த கட்டளைகளை யொருவன் கைக்கொண்டு நடைதரல் காளைப்பருவமேயாயின் உத்தமமாகும். மேற்றாயின் மத்திமமாகும். அதினுமேற்றாயின் அதமமாகும். என்னெனின்,—பாவ கருமங்கண் மேன்மேலு மறியாமையால் வளர்தலினாலும், நரைதிரை சோம்பு பெருகிக்கொண்டு வருதலினாலுமெனு மேதுக்களை யெடுத்துக் காட்டுக. சிலர், மூப்பு வந்ததன் பின்னேதான் ஞானாசாரியரை யடுக்க வேண்டுமென்று மொழிவர். அவருக்கு உடம்பிலுண்டாய நரை திரையைப் போலக் காமாதி சித்தவிருத்திகள் நரைதிரை கொண்டிலவாகலின் அவர் கூற்று, நவைாுடை நசையின் மேற்றாமென்க ; மரணம் இன்னநேரமென் றில்லாதிருத்தலை யவரெண்ணாதவருமாவரென்க. இந் நியாயம் விளங்கற்பாலதாய்த் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கு—

" இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனற்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே."

என வெழுந்துளது. இவ்வாற்றான் விடுதலை விரும்பு விவேக முதித்தவன்றே மூப்புத் தோன்றிவிட்டதென்று முத்திக்குபாயந்தேட லறிஞர்கடன்மை யாகின்றதன்றோ ?

ஒருவன், நூல்களைக் கற்றதனால், நூலின் பயனை வாயால் வழங்கலாமேயன்றி யனுபவித்தல் கூடாது. திருவள்ளுவநாயனார்—

" கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக."

என்று சொன்னபடி, ஒல்லையி லனுபவத்திற்குக் கொண்டு வருபவனே பலனாளியாவன் ; அவனே அறிஞன்.

சரியை, கிரியை, யோகங்காறு முண்டாகு பயன்களெல்லா மொருவனுடைய புது மணக்கோல ஆடம்பர மகிழ்ச்சிபோலவும், ஞானப்பயன் அம்மணமகனும் மணமகளும் விவாகோற்சவ சங்கத்தையுஞ் சடங்குகளையும் விட்டகன்று தனித்த கிருகத்துட் சென்று இரகசியமாயிருந்து



அபிமானமச்ச மென்பவற்று ளொன்றுமின்றி இரகசியமா யனுபவிக்கு மின்பம்போலவு முள்ளன. இவ்வின்பம், சீவான்மா பரமான்மாவைக் கூடி யனுபவிக்கும் பேரின்பமாதலின் அஃதித்தகைமைத் தென்பதை யனுபவித்த வான்மாவே யறியு மாகலின் அஃதிங்குச் செவ்வனே வோதற்கொண்ணாத வொன்றாமாகலின் அஃது அநிர்வசனத்தின்கட்படுவதாம்.

பிராணபந்தன (ஹட) அடயோக சித்தியாலும் ஈசுரபத்தியாலும் பலதிறச் சித்திக ளுண்டாம். அவை, ஆன்மலாப ஞானிக்கும் வேண்டுமென்பதின்று. திருவள்ளுவநாயனார்—

" பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்."

என்று பணித்தபடி அவனுக்குப் பற்றறுதலேவேண்டும். புவனபோக சரீரவாஞ்சையாகிய வெளிப்பற்றும், அந்தக்கரணாதி — தத்துவ வாஞ்சையாகிய வுட்பற்று மறுப்பது துறவு மார்க்கத்திலேயே யினிதுகூடும்.

ஆறாவது

## துறவறநிலையியல்

துறவுமார்க்க ஞானம், பொன்னிற் பதித்த இரத்தின மொக்கும். இல்லறமார்க்க ஞானம், இரும்பிற்பதித்த இரத்தின மொக்கும். ஒரு சீவனுக்குத் துறவு நிலை, மறுபிறப்பா யெண்ணப்படுகிற தென்று மாதவாசாரிய ரென்னுந் தவமுடையார்க்கு ஸ்ரீ தேவியார் சொல்லி யருளியது கண்ணுறப்படுதலின் அது, தானனுபவிக்க வென்று தேடியவனைத்துந் தன்னைவிட்டு நீங்கச் சாவானைப்போலத் துறவியுமாகின்றனன் : அவன் பற்றுடையானல்ல னெனும் பொருள் பயக்கின்றதன்றோ. துறவணைந்தோ னிதய மொன்றையே நாடும் ; மனோலயமாம். இல்லணைந்தோ னிதயம் புல பல நாடும் ; மனோலயமாகாது. இவை இயல்பாமால்.

இந்தத் துறவினை, முதன்முறையாக வெளிப்பற்றாகிய உயிர்ச் சார்பு (= உடம்பு) பொருட்சார்பென்னு மிருதிறமு

மொழித்துப் புறத்துறவாகவும், இதன்கண்வைத்த அவாவினை அறவேயறுத்து இரண்டா முறையாக இந்திரிய நிக்கிரகம் பண்ணிப் பின்னை முன்னத்தே முன்னேறியிருந்த வாசனையை யெழாதவாறு நசித்து உட்டுறவாகவுங் கோடல் வேண்டும். பின்னை, நனவிற் சுழுத்தியையெய்தி, மேல் அஞ்ஞான நிவிர்த்தி யாற்றி, மேற் சீவதரிசனஞ்செய்து, மேற் பரைதரிசனம்பண்ணி, மேற் சிவதரிசனஞ்செய்து, மேற் சீவவியல் சிறிது மில்லாச் சிவவியலாஞ் சமாதி கூடல் வேண்டும்.

**போக்த** வெளிப்பற்றைச் சார்ந்த மனைவி மகார் முதலினோர் வாஞ்சையைப் புறப் பற்றென்றுஞ் சரீர வாஞ்சையை இடைப்பற்றென்றுஞ் சிலர் சொல்லுப. அப்படியாயிற் பற்று மூவகையாம்.

**உட்பற்** றொழித்தோரிற் சிலர்பாற் புறப்பற்றுப் பொருள்களிருத்தலு முண்டு. அது, வேரறுந்தகொடி சில்போது பச்சென்றிருத்தன் மானும். இங்ஙனம், அகப்பற்றாகிய வேரை முதலிற் களைந்துவிடிற் பின்னர்ப் புறப்பற்றாகிய கொடி தானே யுலர்ந்து போமென்றுங் கோடுமெனின்,—அது முறையன்று; முட்களுடைச் செடியைக் கொடியை முன்னர்க் களைந்து பின்னர் வேரைக் கண்டு களைத லுண்மையின். காமம், வெகுளி, மயக்கமென்னு முக்குற்றங்களே இங்கு முட்களாக வெண்ணப்படுகின்றன. இல்லறத்திருந்த ஞானிகளாகிய கண்ணன் சனகன் முதலினோர், உற்பத்தியிலேயே முட்களில்லாச் செடியைக் கொடியை யொப்பரென்க. சைதன்னிய சந்ததப் பிரமானந்தமாகிய யானையை யிரையாய்த்தேடும் ஆன்மாவாகிய அரிமா,யானை தப்பிப்போயினும் விடயானந்தமாகிய எலியை யுண்பதின்று; தோலுரியாத பலவின்பழ முண்பதின்று; உய்த்துணர்க. பற்றறுத்து மனம் ஏகாக்கிரப்படத் துறந்த விவேகி யானவன்—

(௧) வெள்ளிய கௌபீனமேனும், வெள்ளிய ஆடையேனும் அழகிலதா யணிபக்கடவன். திருவருட் செயலாற் கல்லாடை கிடைப்பினு மதனைத் தரிப்பவனுகலாம். (௨)



அலங்கார பூடணாதிகளையும், நல்ல வாசனைப் பொருள்களையு மிச்சியா திருக்கக் கடவன். (௩) புசிக்கத்தக்க பொருள்களுள் வாய்ந்ததை வாங்கிச் சுவைகருதா துண்ணக்கடவன். (௪) ஆயிடை, அன்பிலாருடைய அன்னபானாதிகளை யருந்தா திருக்கக் கடவன். (௫) கறையற்ற பல்லோடு வயங்கக் கடவன். (௬) வாய்புடைச் சொல்லன்றி மற்றும் வார்த்தை யொழிந்தவனாய் வாழக்கடவன். (௭) தசனம் வெளிப்படக் கனைத்து நகையாதிருக்கக் கடவன். (௮) புத்தகங்கள், கடவுளை யுண்டாக்க வரவில்லை; நிச்சயிக்க வந்தன; அவற்றின் பேதத்தால் அக்கடவுளும் பேத விகாரப்படல் யாண்டு மின்றெனுந் தெளிவாற் பாடண்டவாத தருக்கங்கட்குக் காது கொடாதிருக்கக் கடவன். (௯) வருணாச்சிரம வுயர்வு பாராட்டுவாரோடுந் தெய்வநிந்தை செய்வாரோடுஞ் சேராது செல்லக்கடவன். (௧௦) ஆசிரியரையும், அடியவராய அறிஞர்களையும், ஆரணியவாச தவவேடதாரிகளையும் வந்தித்துக் கொள்ளக் கடவன். (௧௧) யாவரேனுந் தனக்குச் செய்யும் வந்தனோபசாரங்களைச் சிவப்பிரீதி செய்யக் கடவன். (செய்யாதிருப்பிற் செய்த தவங்குன்றும். தன்னைப் பிறர் வணங்கற் கிடங்கொடா திருத்தலு நலனே.) (௧௨) வெப்ப தட்பங்களை யியன்றவளவு பொறுத்துக் கொள்ளக் கடவன். (௧௩) தரையிற் படுக்கக் கடவன். (அணையிற் படுத்தல் கூடாது.) (௧௪) ஊனுறக்கங்களைக் குறைத்து யோக நித்திரையா யுறங்கக் கடவன். (௧௫) பல்லிடத்தும் பயமிலாது உண்ணோக்கா யுலாவக் கடவன். (௧௬) பிரேதம் பிழைத்தெழினும் வியப்பென நோக்காதிருக்கக் கடவன். (௧௭) பிறர்செய்யும் பிழைகளைப் பொறுத்துக் கொள்ளக் கடவன். (௧௮) பெருமையில்லாதவனாய்க் குழவிகள் குணங்காட்டி யிருக்கக் கடவன். (௧௯) நான் எனதென்னு மபிமானத்தை யறுக்கக் கடவன். (இவ் வறுத்தலையே துறவென்றுங் கூறலாம்.) (௨௦) செலவு நிகழ்வு வரவென்பன கருதாதவனாயிருக்கக் கடவன். (௨௧) பொன்னும் ஓடுமொன்றெனமதிக்கு நிருவிகற்ப சிந்தையோடு விளங்கக் கடவன். (௨௨) ஈசுவரோபாசனையை யிடை யறுது விருத்

திக்கக் கடவன். (௨௩) தனது தவத்தி னுண்டாகு தேவ ரகசியங்களை வீணே வெளிப்படுத்தா திருக்கக் கடவன். (௨௪) ஒருதெய்வ வழிபாடுடைத் தன்னுடை யெண்ணத்தைத் தனித்திருந்தே முடிக்கக் கடவன். (௨௫) சிவ பரம் பொருளின் றிருவடிப்பே றெய்துங்காறும் இத்திறத் துறவு நெறியிலேயே நிற்கக் கடவன்.

கூறிப்போந்த கட்டளைகளுட் ௧௦ - வதாய ஆசிரிய வந்தனம்—ஆசாரிய னடிக்கினும், உதைக்கினும், ஏசினும் பொறுத்துக்கோடல், நீங்காது நிற்றல் என்னுஞ் சாந்தமும், பரிவுங் கூடிய வுத்தம குணத்தோடும் நிகழத்தக்கது. என்னை? ஏசுதன் முதலிய நிகழ்ச்சிக்குப் பின்னே தான் சிலருடைய வுண்மைக்குணம் வெளிப்படூஉ மென்பதூம் இவ்வுலகறிந்த வுண்மைகளு ளொன்றாகலின். ௨௨ - வதாய ஈசுவரோபாசனையை விருத்திப்ப தெப்படி யெனின்,—தனக்கு ஞானசாரியர் போதித்த முறைகொடே யென்க. அவ்வீசுவரன் மாட்டு நல்ல பிரியமும், மதிப்பும், பிதா பிள்ளையென்னு முறையும் ஆண்டவன் அடிமையென்னு நிலைமையும் மல்கத் தான் வயங்கவேண்டும். ஆண்டே, உள்ளுருக்க நாட்டமும் மல்கவேண்டும். கன்றைத் தேடிப் பசு, கதறுவது போற் கதறவும் வேண்டும். தனது ஏலா நிலைமையை நினைந்து பிதாவே! நீர் என்றுவந்தருள்வதெனப் பெருமூச்செறிய நின்று, மயிர்க்கூச்செறிய, என்பு நெக்கு நெக்குருகத் தேங்கித் திகைத்துத் தியானித்து நின்று காணக் கிடைக்குமோவென வுள்கிக் கண்ணீ ருகுத்து, அது தாரை தாரையாயொழுக அழவும் வேண்டும். அவனது திவ்விய திருநாமத்தையே அடிக்கடி உருவாகச் செபிக்கவும் வேண்டும். நல்ல தோத்திரமாய் வேத வேதாந்த ரசமாய்த் தான் பாடியதையேனும் பிறர் பாடியதையேனும் உழுவல் பிறங்கப் பாடவும் வேண்டும். அங்ஙனம் பாடுவது—அதிக சத்தமிட்டேனும், ஆலாபனம் பண்ணியேனும், அன்னியர்செவிக்கின்பமா யிருக்க வேண்டுமெனுங் கருத்துக் கொண்டேனும் பாடொண்ணாது. இரக்க வுருக்கங் காட்டித் தெய்வ சந்நிதியிலே திவ்விய



விண்ணப்பஞ் செய்தலென இலாலனையாய் விரைவில்லா, பாடவேண்டும். யாரு மில்லாத வொரு தனியிடத்தி இறைவனை முன்னிலையாக்கிக்கொண்டு பாடுவதாயின், ஏ, புடைச் சந்தரசம் இனிது பொருந்தப் பாடி வந்திக்கலாம் என்னை? கேட்போ னிறைவனே யாகலின். (தத்துராய) பிரமகீதையில்—

"உலகியல்பாங் கீதைக்கு முவந்தருளு மிறையென்றால்
இலகியவை திககீதைக் கேன்செய்யா னிறைபதனால்
நலமிகுந்த பொருள்வேண்டி னலமிதுபத் தியினோடும்
பலமிகுநற் கீதைகளே யெப்பொழுதும் பாடுவான்."

எனவும், திருவாசகத் திருச்சதகத்தில்—

"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலைதெருவுதோ றலறிலைசெய்வதொன் றறியேனே"

எனவும் வருவனவும் பிறவுங் கருதுக. இத்தகைய நிட்காம பத்தி விசுவாசத்தினாலே தெய்வநேயங் கிடைப்பதுமன்றி, உண்மையருளும் உண்மை ஞானமும் வாய்க்கும். சிறந்த பத்தி விசுவாசத்தைக் கட்டுவாங்கனென்னும் பெயரிய அரசன், இரண்டு நாழிகை புரிதலும் அவனுக்கு வீடுபேறெய்திற் றென்பதும் வேறு சிலருக்கு மங்ஙன மஃதெய்திய தென்பதும் முந்துநூல்களிற் பெறப்படுகின்றமையின், அவ்வித பத்தி விசுவாச சாதனங்கள், துறவறச்செல்வ முள்ளார்க்கு முரியனவேயாம்.

தவத்திற் கங்கமாய்ச் சடையேனுஞ் சிகையேனும் வளர்த்தல் வேண்டும். முண்டிதஞ் செய்துகொளினுங் கொளலாம். (சிகையிற் சீப்பிட்டுச் சீவிக் கோடல் கூடாது.) இவ்வங்கப் பயன்பற்றிய மேற்கோள்—

"பத்தர் மூன்முறை வேணி பரித்திடில்
ஒத்த வற்றுறு வேணியொவ் வொன்றிற்கு
மெகது மச்சுவ மேத பலத்தினைச்
சத்தி யம்மவ ளொடொறுஞ் சார்தலே.
அண்ட வாணனுக் கன்பொடு முண்டிதங்
கொண்ட நீள்சிகை யாயினுங் கொண்டுளோர்

பண்ட ருந்ர மேத பலத்தினே
ரெண்டி கழ்ந்த தினந்தொறு மெய்துவார். ''

எனச் சிவபுண்ணியத்தெளிவின்கண் வரு செய்யுள்களாம். வேணி = சடை. மயிர்வினைஞன்ரூழில், துறவியின் றலையினைத் தீண்டாதொழித லேற்புடைத்தாகவு மெண்ணப் படுகிறது. தவவேடதாரிகளாகிய ஈசனடியார் எக்குலத் தவராயினு மவரை வணங்கல் கடன்மையாம்; மாறுபடிற் றீதாம். இல்லறந் துறவறமெனு மிரண்டற்கு மிது பொதுவே. பஞ்சாக்ஷரப்பதிபசுபாச விளக்கத்தில்—

'' எந்தக் குலத்திற் பிறந்தாலுமீச னடியார்க் கிழுக்கில்லை
நிந்தை செய்தோர் நரகுறுவார் நித்த ஞானை யையமில்லை
மைந்த ரோடு மனையோடு மாளா திருந்த நிதியோடும்
எந்தை யடியார் மனங்கலங்கிலீரே ழுலகுங் கலங்காவோ. ''

எனவரு செய்யுளும் இங்கே கருதிக் கொளத் தக்கதே. துறவுநிலை நின்றேற்கும் அன்னத்தின் பொருட்டு, ஒருவனைப் பின்ருடர்ந்து போதல் கூடாது. காடி கூழுண்ண நேரினும் அங்ஙனம் வெறுப்புறல், தவக்குற்றமாம்; சிவச் செயலே பாவிக்கத்தக்கது. நீதிவழியெய்து சிவச்செயலை மறந்து எவரையுஞ் சபிக்கொண்ணுது. தவமுடையோ ரங்ஙனஞ் சபிப்பது, சிறுபிள்ளைகளைகள் பாலலீலையிற் குட்டி னவ னிருக்கக் குட்டாதவனை மற்ருெருவன் காட்ட அவனைத் தாக்குவது போல்வதாம். சாபத்தான் அரிய தவமுமழியும். இது—

'' கோப மிக்கபோ தேவ ராறுவார்
குறுகு வோர்தமைக் கொடிய நோய்புகும்
சாப மிட்டுமா தவர்க ளாயினர்
தலைமை மிக்கதந் தவமி ழப்பரே. ''

என்னும் அஞ்ஞவதைப்பரணிப் பகுதியினும் பெறப் படுகின்றது.

'' சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே '' |.

என்று கூறலை யுலகருமுணர்க்கு நடப்பது நன்கு.

(தொடரும்)

18696